**Previous date of examination – 02.07.19**

**28.03.2022**

**CC 619–12 PW–1 ,சுப்பிரமணி த/பெ.பழனியாண்டி**

**சாட்சி ஆஜர் சத்யப்பிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தேர்தல் நடத்தும் அலுவலராக என்னை துணை பதிவாளர் நியமித்தார். சாட்சி 2 ஆறுமுகம் அரசுத் துறையில் முதுநிலை ஆய்வாளராக வேலை பார்த்தவர் என்றால் சரிதான். அவர் உதவி தேர்தல் அலுவலராக நியமிக்கப்பட்டு இருந்தார் என்றால் சரிதான். அ.சா.3 கிருஷ்ணசாமி கூட்டுறவு சங்க செயலாளராக இருந்தவர் என்றால் சரிதான். எத்தனை இயக்குனநர்களை தேர்ந்தெடுக்க தேர்தல் நடந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. எத்தனை நபர்கள் போட்டியிட்டார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எந்தெந்த கட்சிகளை சார்ந்தவர்கள் போட்டியிட்டார்கள் என்று எனக்கு தெரியாது. எத்தனை வாக்களார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. வாக்கு செலுத்துவதற்காக காலை 9 மணியளவில் சுமார் 200 நபர்கள் அங்கு கூடியிருப்பார்கள் என்றால் சரிதான். நான் தேர்தல் நேரத்தில் வாக்கு சீட்டு கொடுக்கும் வேலை செய்து கொண்டிருந்தேன். புகாரில் நான் வாக்குச் சீட்டு கொடுத்துகொண்டிருந்த விபரத்தை சொல்லியுள்ளேன். தேர்தல் நடந்த அலுவலகத்திற்குள் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் என்னுடன் தேர்தல் பணி செய்த நபர்களும் ஏஜெண்ட்களும் இருந்தார்கள். எத்தனை நபர்கள் என குறிப்பிட்டு சொல்ல இயலாது. அதில் கருணாநிதி என்பவர் தான் வாக்குச் சீட்டை பிடுங்கினார் என்றால் மூன்று பேரும் சேர்ந்து பிடுங்கினார்கள். சம்பவம் நடந்த போது காலை 9.45 மணி இருக்கும். சின்னகலையம்புத்துரில் இருந்து பழனிக்கு 8 கிமீ தூரம் இருக்கும். இருசக்கர வாகனத்தில் வந்தால் 1/2 மணி நேரத்தில் வந்து விடலாம். நான் 12 மணிக்கு புகார் கொடுத்து இருப்பதால் காலதாமதம் இருந்தது என்று சொன்னால் ஒரு தரப்பினர் வாக்குச் சீட்டை நபரை நடவடிக்கை எடுக்க விட்டால் எங்களை வெளியே செல்ல அனுமதிக்க மாட்டோம் அதிகாரிகள் வர வேண்டும் எனக்கூறி சாலை மறியலில் ஈடுபட்டதால் காலதாமதம் ஏற்பட்டது. எதிரிகள் பறித்து சென்ற வாக்குச் சீட்டுகள் 55 முதல் 150 வரை உள்ள வாக்குச் சீட்டுகள் கொண்ட கட்டு ஆகும். துணை

L RAGUPATHIRAJA

Digitally signed by L RAGUPATHIRAJA
Date: 2022.03.28 17:07:43 +0530

பதிவாளரிடம் இருந்து வாக்குச் சீட்டுகளை பெறும் போது அத்தாட்சியில் கையெழுத்து செய்து வாங்கினேனா என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவ காலத்தில் தேர்தல் நடந்த சங்கத்தில் சி.சி.டி.வி. கேமரா இல்லை. எதிரிகள் ஓட்டு போட வரிசையில் வந்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். எதிரிகள் வாக்கு செலுத்த வந்த போது குறிப்பிட்ட ஒரு தரப்பினருக்கு வாக்கு செலுத்த வேண்டும் என்று சங்கத்தின் செயலாளர், சிற்றெழுத்தர் முனியாண்டி ஆகியோர் வாக்காளர்களிடம் கேட்டதை எதிரிகள் தட்டி கேட்டார்கள் என்றும், அப்போது வாக்குவாதம் ஏற்பட்டு சுமார் 50, 100 நபர்களுக்கு இடையே தள்ளுமுள்ளு அப்போது வாக்குச் சீட்டு காணாமல் போய் உள்ளது என்றும், வாக்குச் சீட்டு காணாமல் போனதற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் வாக்குச் சீட்டை பிடுங்கிய போது வெளியில் இருந்த பெண் காவலர் வந்து தடுக்க முயற்சித்தார். அதற்குள் தள்ளி விட்டு ஓடி விட்டார்கள். அத்துடன் நாங்கள் தேர்தலை நிறுத்தி விட்டோம் என்றால் சரிதான். அதே நாளில் தேர்தல் நடந்த பாப்பம்பட்டி, நெய்க்காரப்பட்டி, பெரியகலையம்புத்தூர் ஆகிய சங்கத் தேர்தல்களும் நிறுத்தப்பட்டது என்று சொன்னால் அங்கு நடைபெற்ற வேறு பிரச்சனைகளால் நின்று விட்டதாக கேள்வி பட்டேன். எங்களின் துணை இயக்குனர் வாய்மொழியாக ஆளுங்கட்சிக்கு சாதகமாக இருக்க வேண்டும் என்று சொல்வார்கள்என்று சொன்னால் சரியல்ல. ஆளுங்கட்சிக்கு சாதகமாக தேர்தல் இல்லாவிட்டால் தேர்தலை நிறுத்த சொல்வார்கள் என்று சொன்னால் சரியல்ல. சங்கத்தின் செயலாளர், மற்றும் சிற்றெழுத்தர் ஆகியோரின் துண்டுதலின் படி நான் பொய் புகார் கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

L RAGUPATHIRAJA
Digitally signed by L RAGUPATHIRAJA
Date: 2022.03.28 17:07:53 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous date of examination – 02.07.19**

**28.03.2022**
**CC 619–12 PW–2 ஆறுமுகம் த/பெ.அம்மாகுளம்**

**சாட்சி ஆஜர் சத்யப்பிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரிகளில் யார் வாக்குச் சீட்டை பிடுங்கினார்கள் என எனக்கு ஞபாகம் இல்லை என்றால் சரிதான். உதவி தேர்தல் நடத்தும் அலுவராக என்னை நியமித்தவர் துணை பதிவாளர் என்று சொன்னால் சரிதான். ஓட்டு சீட்டை நான் கொடுக்கவில்லை. தேர்தல் நடத்தும் அலுவலர் கொடுத்துக்கொண்டிருந்தார். போலீசார் விசாரணை செய்த போது மேற்படி விபரத்தை நான் சொன்னேன். தேர்தல் நடந்த போது எதிரிகள் வாக்குச் செலுத்த நின்று கொண்டிருந்தார்கள் என்றால் இருக்கலாம் நான் பார்க்கவில்லை. பிரச்சனை நடந்த உடன் சுமார் 100 நபர்கள் கூடிவிட்டார்கள் என்றால் அதற்குள் இருக்கும் எத்தனை நபர்கள் என்று சரியாக குறிப்பிட்டு சொல்ல முடியாது. கூட்டமாக இருந்தது என்றால் சரிதான். யார் ஓட்டு சீட்டை பிடுங்கினார்கள் என்று என்னால் உறுதியாக சொல்ல முடியாது என்றால் சரிதான். எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும், ஒரு கணக்கிற்காக எ திரிகள் மீது வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சம்பவம் நடந்தது உண்மை எதிரிகள் தானா என்று எனக்கு தெரியாது.

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous date of examination – 02.07.19**

**28.03.2022**
**CC 619-12 PW-4 முனியாண்டி த/பெ. பேரடையான்**

**சாட்சி ஆஜர் சத்யப்பிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பெத்தநாயக்கன்பட்டியில் வசித்து வருகிறேன். நான் 1993 ம் வருடம் கூட்டுறவு சங்கத்தில் வேலைக்கு சேர்த்தேன். நான் அலுவலக உதவியாளராக வேலைக்கு சேர்ந்து அதன் பிறகு நகை மதிப்பீட்டாளராக பணியாற்றினேன். எதிரிகள் வாக்குச் சீட்டை பறித்து சென்றதாக சொல்லும் சம்பவம் 9.45 மணிக்கு நடந்தது. தேர்தல் நடந்த அன்று நான் வாக்களாருக்கு மை வைக்கும் வேலை செய்து கொண்டிருந்தேன். எதிரி கருணாநிதி தான் ஓட்டுச் சீட்டை பிடுங்கினார் என்றால் மூன்று எதிரிகளும் தேர்தல் அலுவலரை அமுக்கி வாக்குச் சீட்டை பிடுங்கினார்கள். அ.இ.அதிமுக. ஆட்சியில் எனக்கும் செயலாளருக்கும் வேலை வழங்கப்பட்டது அஇஅதிமுகவை சேர்ந்தவர்களுக்கு ஓட்டு போட சொல்லி தேர்தல் நடத்தும் அலுவலகத்திற்குள் சொல்லி கொண்டிருந்தோம் என்றும், அதனை எதிரிகள் தட்டி கேட்டார்கள் என்றும், அதனால் வாக்குவாதம் ஆகி தள்ளுமுள்ளு ஏற்பட்டது என்றும் அதில் வாக்குச் சீட்டை காணாமல் போய் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. நான் மை வைத்துக்கொண்டிருந்ததால் யார் வாக்குச் சீட்டை பிடுங்கினார் என எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. சின்னஎல்லப்பனும், நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் விரோதம் உள்ளது என்றும் அதனால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாக்குச் சீட்டை பிடுங்கும் போது நான் ஏன் தடுக்கவில்லை என்றால் கூட்டத்தில் நான் தடுக்க சென்ற போது என்னையும் பிடித்து தள்ளினார்கள். வழக்கிற்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**